மாதர் மனோரஞ்சினி.

(எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.)

VOL. 2. | MADRAS: MAY 1900. | No. 3.
புத்த. உ. | சென்னப்பட்டணம், 1900 - ஹ மே-மீ. | இல. ங.

மூன்றுகோரிக்கைகள்.

ஒரு காலத்தில் ஒரு விவேகமுள்ள இராஜா இருந்தார். இவர் கல்வியிற்றேர்ந்தவர். இவர் தமது தேசத்தில் சில பாடசாலைகளை ஏற்படுத்தியிருந்தார். அங்கு அநேக ஏழைப்பிள்ளைகளும், தனவந்தருடைய பிள்ளைகளும் படித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அரசர் தமது மந்திரியை நோக்கி ஐயா, நமது பாடசாலைகளில் முதலில் தேறியமுதல் மூன்று பிள்ளைகளையும் வரவழைபும் அவர்களுக்கு வெகுமதி அளிக்கலாம். மேலும் அவர்கள் எவைகளைக்கோருகிறார்களோ பார்ப்போம் என்றார். மந்திரியானவர் உடனே வேலைக்காரனையனுப்பி அந்த மூன்று பிள்ளைகளையும் வரவழைக்கும்படி உத்திரவளித்தவுடன் வேலைக்காரன் பாடசாலைக்குப் போய் முதலில் தேறியமூன்றுபிள்ளைகளையும் இட்டுக்கொண்டு இராஜன் சமுகம் வந்தான்.

அரசன் முதல் பிள்ளையைக்கூப்பிட்டு "நீ நல்லவனாகவும் கெட்டிக்காரனாகவுமிருக்கின்றமையால் உனக்கு மூன்று வெகுமதிகளை அளிக்கின்றேன். நீ கோரும் வஸ்துக்கள் எவையென்று" கேட்டார்.

ஓ மகாராஜாவே "எனக்கு ஒரு நல்ல குதிரைவேண்டும். ஏனெனில் அதன்பேரில் நான் ஏறிக்கொண்டு பெரிய பிரபுவைப்போல சவாரி செய்வேன். மேலும் இரண்டுபை சாவரன்களும் நேர்த்தியான உடுப்புகளும் வேண்டும்" என்றான்.

அரசன் உடனே அவன் கோரியவைகளை அவனுக்குக் கொடுக்கும்படி உத்திரவளித்தான். பின்பு இரண்டாவது பிள்ளையைக்கூப்பிட்டு அவன் கோரியவைகளைச் சொல்லும்படி கேட்டார்.

அவன் மகாராஜாவே ! "எனக்கு சாப்பிட நேர்த்தியான பலகாரங்களும், சுவையுள்ள பழங்களும், அநேக புஷ்பச்செடிகளுள்ள ஒரு தோட்டமும், நான் இனி வேலையொன்றுஞ் செய்யாமலுமிருக்கவேண்டும்" என்றான்.

உடனே வேந்தன் அவன் கோரியவைகளையும் அளிக்கும்படி உத்திரவு செய்து மூன்றாவது பிள்ளையைக் கூப்பிட்டு அவன் கோரியவைகளைக் கேட்கும்படி சொன்னார். அவன் அதிகமரியாதையுடன் எழுந்து மகாராஜாவே! "என் தாய் தந்தைகள் வயது முதிர்ந்தவர்களாயும், ஏழைகளாயுமிருக்கிறார்கள். அவர்களால் வேலைசெய்ய முடியவில்லை. ஆகையால் அவர்கள் தங்கள் காலத்தைக் கஷ்டப்படாமல் சுகமாக கழிக்கும்படி விரும்புகிறேன். ஏழைகளுக்கு உதவி கிடைக்கவேண்டுமென்று விரும்புகிறேன். ஏனெனில் ஏழைகளுடைய கஷ்டம் எனக்கு நன்றாகத்தெரியும். மேலும் நான் நல்லவனாகவும், ஜனங்களுக்கு உபயோகமுள்ளவனாகவுமிருக்கும்படியாகவும் விரும்புகிறேன் என்று" பதில் சொன்னான்.

அரசன் இவைகளைக்கேட்டு மகிழ்ந்து எனது பிரியமுள்ள குழந்தாய் முதல் இரண்டு கோரிக்கைகளையும் நான் அளிக்கிறேன். ஆனால் மூன்றாவதை நான் அளிப்பது அசாத்தியம். நீ கடவுளைத்தான் கேட்கவேண்டும். அவர் உனக்கு அதை அளிப்பார் என்பதற்குச் சந்தேகமில்லையென்று பதில் சொன்னார்.

பின்பு அரசன் எழுந்து தன்னைச்சுற்றியிருக்கும் ஜனங்களைப்பார்த்து பின் வருமாறு சொன்னார்:—இந்த மூன்று பிள்ளைகளுடைய கோரிக்கைகளைக்கேட்டிருக்கிறீர்கள். முதல் பையன் டம்பமாயிருப்பதற்கு விரும்பினான். 2-வது பையன் சோம்பேறியாயிருக்க விரும்பினான். மூன்றாவது பையனோ தன்னைக்கவனியாமல் இதராளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று விரும்பினான். ஆகையால் மூன்றாவது பிள்ளையை யான் எனது அரண்மனையிலேயே வைத்துக்கொண்டு அவனையும், அவனுடையதாய் தந்தைகளையும் காப்பாற்றுகிறேன். கடவுளும் இவனை ஆசீர்வதிப்பார் என்று சொல்லி மூன்றாவது பிள்ளையைக் காப்பாற்றிவந்தார்.

சிங்கம்.

சிங்கம் உலகத்திலுள்ள எல்லா மிருகங்களிலும் மேலானது. இதன் சம்பீரமான பார்வையினாலும், அதிக பலத்தினாலும், தைரியத்தினாலும், இடி-முழக்கம்போன்ற கர்ச்சனையினாலும் இது மிருகேந்திரன் என்று சொல்லப்படுகிறது. இது மஞ்சளும், கபிலவர்ணமுமுடைய ஒரு பெரிய பூனையைப்போலவிருக்கும். இதன் வாலில் மயிர் அடர்ந்திருக்கும். இது 3 - அல்லது 4 - அடி உயரமிருக்கும். வாலைச் சேர்க்காமல் இது 6-முதல் 9-அடி நீளமிருக்கும். இதன் பளுவோ வெகு அதிகம். ஆண்சிங்கத்தின் தலையும், கழுத்தும், தோளும் மிகவும் பெரியது. கழுத்தில் பிடரிரோமம் அடர்ந்திருக்கும். பெண்சிங்கத்தின் தலை ஆண்சிங்கத்தைவிட சிறியதாகவிருக்கும். இதனுடைய பற்கள் நமது பற்களைப்போலல்லாமல் நீண்டு வளைந்திருக்கும். இதன் நகங்கள் மிக்க பலமுள்ளவைகளாகவும், வளைந்தும், கூர்மையாகவுமிருக்கும். பூனையைப்போலவே இதற்கும் கண்களுண்டு. பகல்காலத்தைவிட இராத்திரியில் இதன் கண்கள் பளபளப்பாயும், உருண்டும் திரண்டுமிருக்கும். இதன்வாலின் ஒரே வீச்சால் ஒரு மனிதனைக் கீழே தள்ளிவிடும். மேலும் ஒரு பூனை ஒரு எலியைத் தூக்கிக்கொண்டு போவதுபோல ஆடு, மான், கன்றுக்குட்டி இவைகளில் ஒன்றைக்கண்டால் உடனே எளிதில் தூக்கிக்கொண்டுபோய் விடும். சிங்கமானது சந்தோஷமாக விருக்கும்போது அதன் பார்வை கம்பீரமாகவிருக்கும். கோபமாயிருக்கும்போது அது தன்வாலை தன்மேல் அடித்துக்கொண்டும், தன் பற்களைக் காட்டிக்கொண்டுமிருக்கும். அப்பொழுது அதன் கண்களில் நெருப்புப்பொறி பறப்பதுபோலக் காணப்படும். சிங்கம் பகலில் நன்றாகத் தூங்கும். ஆகாரந்தேடுவதற்காக இராத்திரியில் வெளியிற்போகும். இது வெளியிற் போகும்போது மான், கரடி, ஆடு, எருது முதலிய மிருகங்கள் இதன் வாசனையைத் தெரிந்துகொண்டு நாலாபக்கத்திலும் ஓடத் தலைப்படும். சிங்கம் மெதுவாகச்சென்று ஏதாவது ஒரு மிருகத்தின்மீது பாய்ந்து அதைக்கொன்று புசிக்கும். சிங்கத்திற்கு வயதாய் பலம் குறைந்து விட்டால் சுறுசுறுப்புள்ள மான் முதலியவைகளைப் பிடிக்கமுடியாது. அப்பொழுது அது பட்டினியால் வருந்தும்.



சுமார் 120 - வருஷங்களுக்கு முன் இந்தியாவின் வடமேற்குப்பாகங்களில் பெரும்பாகத்தில் சிங்கங்களிருந்தன. டெல்ஹி நகரத்தைச் சுற்றிலும் ஐரோப்பியர்கள் சிங்கத்தைக் கொல்வதற்காக வேட்டைக்குப் போய் வந்தார்கள். பம்பாய் இராஜதானியில் வடமேற்கிலுள்ள கூர்ச்சர நாட்டில் தற்காலத்தில சில சிங்கங்களிருப்பதாகக் கேள்வி. மேலும் ஆப்பிரிக்காக் கண்டத்தின் சில பாகங்களிலும் சில சிங்கங்களுண்டு. சிங்கம் வெகு நல்ல மிருகம். இதற்குப் பசியாயிருக்கும்பொழுதுதான் வெளியிற் போய் மிருகத்தைக் கொன்று புசிக்குமே தவிர இதர காலத்தில் கொல்லவே கொல்லாது. ஒருவன் இதற்கு உபகாரஞ்செய்தால் அதையும் மறக்காது.

சிங்கத்தின் புத்தி கூர்மையும் நன்றியறிவும்.

அநேக வருடங்களுக்கு முன் ரோம் என்ற பட்டணத்தில் ஒரு அடிமை இருந்தான். அவனுக்கு அங்கு உண்டாயிருந்த கஷ்டங்களைச் சகிக்கக்கூடாதவனாய் அப்பட்டணத்தை விட்டு ஓடிப்போகலாமென எண்ணி மறுநாள் அப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டான். அவன் ஒரு பெரியவனாந்தரத்தைக் கடக்கவேண்டி யிருந்தமையால் அதிக கஷ்டப்பட்டுக்கொண்டு அவ்வனாந்தரத்தின் வழியாகச் செல்லுகையில் ஒரு குகை இவன் கண்ணுக்குத் தென்பட்டது. அதற்குச் சமீபத்தில் சிங்கத்தின் சப்தமும்கேட்டது. இவனுக்குண்டான பயமிவ்வளவவ்வளவல்ல. எங்கே சிங்கம்வந்து தன்னைப் புசித்துவிடுமோவென்று திகிலடைந்துகொண்டே வழிநடந்து சென்றான். இவன் இப்படி போய்க்கொண்டிருக்கையில் ஒரு சிங்கமானது நொண்டிக்கொண்டு இவன் சமீபத்தில் வந்து காலைத் தூக்கித் தூக்கி இவனுக்குக்காட்டியது. இவன் பயந்திருந்த போதிலும் இதற்கு என்ன வியாதியோ அல்லது ஏதாவது வலிப்போ யிருக்கவேண்டும். இல்லாவிடின் இது இப்படிச் செய்யாது என்று நினைத்துக்கொண்டு அதன் காலைப்பார்த்தான். உள்ளங்காலில் ஒரு பெரிய நீண்டமுள் ஏறிக்கொண்டு வீங்கியும், சீழ்கொண்டு மிருந்தது. இவன் தன் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு தன்னால் கூடியமட்டும் பலமாக அந்த முள்ளைப்பிடித்து இழுத்தான். முள் வரவில்லை. சிங்கமோ வலியைப் பொறுத்துக்கொண்டிருந்தது. இரண்டாந் தடவையும் ஜாக்கிரதையாக முள்ளைப்பிடித்து இழுத்தான். முள் உடனே வெளியில் வந்தது. உடனே சிங்கத்திற்கு உண்டாயிருந்த வலி குறைந்ததனால் ஒரு நாய் தன் எஜமானனை நக்குவதுபோல அதுவும் இந்த அடிமையை நக்க ஆரம்பித்தது. பிறகு இவன் அந்தக் குகையிலேயே சிலநாளிருக்கையில் ரோம் தேசத்தரசன் வேலைக்காரர்கள் இவனைத் தேடிக்கொண்டு வருகையில் இவன் அகப்பட்டுக்கொண்டான்.

பிடிப்பட்ட இவனை ரோமாபுரிக்கு இட்டுக்கொண்டுபோய் ஒரு அறையில் அடைத்திருந்தார்கள். இவன் தேசத்தைவிட்டு ஓடிப்போனதற்காக இவனை ஒரு மிருகத்திற்கு இரையாகக் கொடுக்கவேண்டுமென்று ஆலோசித்து ஒரு சிங்கத்தைப் பிடித்துவர சில வேடர்களை அரசன் அனுப்பினான். அவர்கள் வனத்திற்குச் சென்று அநேக மிருகங்களைப் பார்த்தும் ஒன்றும் இவர்களுக்குத் தென்படவில்லை. கடைசியாக ஒரு சிங்கம் அகப்பட்டது. இதை அரசனிடத்தில் ஒப்புவித்தார்கள். அரசன் "அதற்கு ஆறுநாள் ஆகாரம் போடாமல் அடைத்து விடுங்கள்; பின்பு இந்த அடிமையை அதற்கு ஆகாரமாகக் கொடுக்கலாமென" உத்திரவளித்தான். வேலைக்காரர்கள் அப்படியே செய்துவிட்டார்கள். ஆறுநாள் சென்று ஏழாவது தினத்தில் வேலைக்காரர்கள் அரசனிடம் போய் ஓ! மகாராஜாவே! ஆறுநாள் சென்றன. சிங்கமோ அதிக சப்தம் செய்துகொண்டு மிகக் கோபமாயுமிருக்கிறது. இப்பொழுது இந்த அடிமையை அதற்கு இரையாகக் கொடுத்தால் அதிக சந்தோஷமாய் இவனைப் புசிக்குமென்றார்கள். அரசன் இவ்வசனத்தைக் கேட்டு,மகிழ்ந்து அவ்விதமே செய்யுங்களென்று உத்தரவு செய்தார். அவர்கள் அந்த அடிமையை இட்டுக்கொண்டு சிங்கமிருக்கும் இடத்தில் தூக்கிப் போட்டுவிட்டார்கள். சிங்கமானது தனக்கு ஆகாரம் கிடைத்ததென்ற ஆவலுடன் இரையை விழுங்க அந்த மனிதன்மேல் கர்ச்சித்துக்கொண்டு பாய்ந்தது. உடனே தன் வலியை நீக்கின புண்ணிய புருஷனென்று அது அறிந்தவுடன் அவனிடத்தில் மெதுவாக வந்து அவனை நக்கி அவன் மடியில் உட்கார்ந்தது. ஜனங்களும், அரசனும் இந்த வேடிக்கையைப்பார்த்து அதிக சந்தோஷித்து அந்த அடிமையைவிடுவித்ததும் தவிர அவனுக்கே அந்த சிங்கத்தையும் வெகுமதியாக அளித்தார். அந்த சிங்கத்திற்கு உடனே அந்த அடிமை ஆகாரம்கொண்டு வந்து கொடுத்தான். பின்பு இந்த நன்றியறிவுள்ள மிருகம் ஒரு நாய் தன் எஜமானன்பின்னால் போவது போல இதுவும் ரோம்தேசத்தில் இந்த அடிமை எந்த இடத்திற்குப் போனபோதிலும் அவன் பின்பாக அது போகும்.

ஸிம்பலீன்.

1-அத்தியாயம்.

(முன்தொடர்ச்சி.)

இப்படியிருக்கிற சமயத்திலொருநாள் அவர்களுடைய அதிக விசுவாசமுள்ள வேலைக்காரனாகிய பிஸானியோ என்பவன் இமொஜனிடத்தில் வந்து, தன்னுடைய எஜமானன், கப்பலிற்போகும்போது, இமொஜனைமறக்

கவில்லையென்றும், இமொஜன்,இமொஜன், என்று சொல்லியழுதுகொண்டு போனதாயும், கப்பலிலேறினவுடன் கைத்துவாலைவீசி, யதை முத்தமிட்டதாயும் சொன்னான். அதற்கு இமொஜன்,

"ஐயோ, தெய்வமே! என்ன செய்வேன், போய்வருகிறாயாவென்று சொல்லுகிறதற்குக்கூட இடைகிடைக்கவில்லையே. நான் இரகசியமாய்ச் சில சங்கதிகள் சொல்லவேணுமென்று நினைத்திருந்தேனே. குறிப்பிட்ட சில சமயங்களில் ஒருவருக்கொருவர் நினைத்துக்கொள்ளவேணுமென்றும், அந்தச்சமயங்களில் ஜெபங்கள் பண்ணவேணுமென்றும், என்னை யொருபொழுதும் மறக்கக்கூடாதென்றும், இட்டாலியாதேசத்துமாதர்கள் அவரை யேமாற்றிப்பதிவிரதாதர்மத்தைக்கெடுத்துப்போடாமல்ஜாக்கிரதையாயிருக்கவேணுமென்றும்சொல்ல நினைத்திருந்தேனே. தவிர என்னைவிட்டுப் பிரிந்து போகிற சமயத்தில் இரண்டு முத்தமிடவேணுமென்றும் நினைத்திருந்தேன் ஐயோ,என்ன செய்வேன்! கார்க்கோடக விஷத்துக்குச் சமானமான அந்த மகாபாவி யென்பர்த்தாவை யோடிப்போ வென்று சொல்லிவிட்டானே, எனக்கு வேறேகதியில்லையே." என்றிவ்வாறு புலம்பிப் பிஸானியோ விடத்திற்சொல்லிக்கொண்டிருக்கும்போது,ஒரு பெண்வந்து இமொஜனை யரசன் மனைவிகூப்பிடுகிறாளென்று சொல்ல, இமொஜன் அங்கே போனாள்.

இது கழிந்தசிறிது நாளில் அரசன்மனைவி தன்னுடைய அரண்மனை வைத்தியனாகிய கார்னீலிபஸ் என்பவனை யழைத்துத்தான் சொன்னமருந்துகளைச் சேர்த்துக்கொண்டு வந்தாயாவென்றுகேட்கக் கார்னீலியஸ் "நீங்கள் சொன்னபடியே கொண்டுவந்திருக்கிறேன். இதோ விருக்கின்றன." என்றொரு சிறிய பெட்டியைக்கையிற் கொடுத்து, "மெல்ல மெல்ல உயிரைமாய்விக்கும் பாஷாணஞ்சேர்ந்த இக்கொடிய மருந்துகளை யேன் செய்யச் சொன்னீர்கள்? இதைக்கேட்டதற்காக என்னைக் கோபித்துக்கொள்ள வேண்டாம் மாதே, தயவு செய்து சொல்லவேணும்" என்று கேட்டான். அப்பொழுதரசன்மனைவி, "ஏ வைத்தியா! இப்பேர்ப்பட்ட கேள்வியை யென்னிடத்தில் நீ கேட்ட தெனக்காச்சரியமாயிருக்கிறது. அனேக காலமாக நான் உன்சிஷ்யையாயிருந்ததை மறந்து விட்டாயா? மருந்து திராவகங்கள், வாசனைத்திரவியங்களைச் செய்யவேண்டிய விதங்களைச் சொல்லித்தந்தாயல்லவா? இவ்வளவுதூரம்படித்த பிறகு வேறேவித மருந்துகள் செய்யவேணுமென்று நினைத்தேன். இம்மருந்துகளை முதலில் தாழ்ந்த ஜீவப்பிராணிகளின்பேரிலுபயோகித்து, அதன் குணாகுணங்களை யறியவேணும்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், பிஸானியோ,

அங்கேவர, அரசன்மனைவி, "இதோ, பிஸானியோ வருகிறான். தன்னுடைய எஜமானனுக்கு அதிக இஷ்டமாயும், விசுவாசமாயும், என்னுடைய புத்திரனுக்கு அதிக விரோதியாயுமிருக்கிறான் ஆகையால் முதலிலிம் மருந்தை யவனுக்குக் கொடுக்கிறேன்." என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு வைத்தியனைப்பார்த்து, அவனையங்கே நிற்கவேண்டாமென்றும், அவனுடைய உதவி வேண்டிய சமயத்தில் சொல்லியனுப்புவேனென்று முரைக்க, வைத்தியன், "நான் அவளைக் கொஞ்சமாகிலும் விரும்பவில்லை. அவளுடைய கெட்ட குணங்களையறிந்து அவளுக்கு விரோதமாய் நானிந்தமருந்தைச் செய்துகொடுத்தேன். மெல்லமெல்ல உயிரைமாய்விக்கக்கூடிய மருந்தென்றவள் நினைத்திருக்கிறாள். ஆனால் இம்மருந்தைச்சாப்பிட்டவர்கள் மெய்ம்மறந்து பிரேதம் போலாய்ச் சிறிதுநேரத்தில் அறிவையடைந்து முன்னிருந்த ஸ்திதியிலிருப்பார்கள். ஐயோ! இம்மருந்தைக் கொண்டு என்ன கொடுமைகள் செய்யப்போகிறாளோ தெரியாதே." என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டுபோய்விட்டான். அப்பொழுது அரசன் மனைவி பிஸானியோவைப்பார்த்து "இமொஜன் இன்றும் அழுதுகொண்டுதானிருக்கிறாளா? நீ சிரமமெடுத்து அவளைப் பாஸ்துமஸைமறந்து, க்ளோட்டனை நேசிக்கும்படியாகச் செய்தால் உன் எஜமானனைப் பார்க்கிலுமேலான ஸ்திதியிலுன்னைவைத்து, வேண்டியதிரவியங்களைக் கொடுப்பேன். அவன் திரும்ப இங்கே வரமாட்டான். அங்கேயும் நல்ல ஸ்திதியிலில்லை. இப்படியிருக்கிறபொழுது, அவனை நம்பினாலுனக்கென்ன நன்மைகிடைக்கும்." என்று சொல்லிப்பெட்டியைக் கீழே தவறவிட்டாள். பிஸானியோ அதை யெடுத்து, அரசன் மனைவிகையிற்கொடுக்க, அதற்கவள் அவனைப்பார்த்து, "பெட்டியிலென்ன விருக்கிறதென்றறியாமல் எடுத்தாய். என் விஷயமாக அதிக வருத்தப்பட்டதினால், அதை நீயே யெடுத்துக்கொள். அது என்னால் செய்யப்பட்டது. இறந்து போகுந்தருணத்திலிருந்த அரசன் அம்மருந்தினால் ஐந்துதரம் பிழைப்புற்றான். இதைவிட விலையுயர்ந்தது வேறொன்றுமில்லை. இதை அச்சாரமாக வைத்துக்கொள். இனியுனக்கதிக வுபகாரம்செய்வேன். இமொஜனிடத்திற்போய் அவளுடைய ஸ்திதியை விவரித்துச்சொல் ஆனால் நான் சொன்னதாக வொன்றுஞ்சொல்லவேண்டாம். நான் சொன்ன வற்றைச் செய்தால் இமொஜன் மாத்திரமல்ல, என்னுடைய புத்திரனும் உன் பேரிலதிகப்பிரியமாயிருப்பான். நீ சொன்னவற்றை யெல்லாம் அரசன் கேட்கும்படிசெய்கிறேன். இவற்றை யெல்லாம் செய்கிற நானுமுனக்கு ஏராளமான திரவியத்தையும் உயர்ந்தபதவியையுங் கொடுக்கிறேன். நான் சொன்னவற்றை மறந்து போகாதே. என்னுடைய மாதர்களைக்கூப்பிடு" என்று சொல்ல

அவன்போனபொழுது அரசன் மனைவி "நான் என்னசொல்லி யும் அவன் மனமாறவில்லையே. கல்லாவது கரையுமே. இவன் இமொஜ னுக்குத் தன் பர்த்தாவை ஞாபகப்படுத்தக்கூடிய வொரு கருவியாயிருக்கி றான். அவனிடத்தில் கொடுத்த மருந்தைச்சாப்பிட்டால் அவனுடனே யிறந்துபோவான். அதினால் இமொஜன் எவருமில்லாமல் கதியற்றுப்போ வாள். பிறகு நான் சொன்னபடியவள் கேட்காமற்போனால் அவளுக்கு மிந்தமருந்தைக்கொடுக்கிறேன்." என்று சொல்லிக்கொண்டிருக்கப் பிஸா னியோ மாதர்களையழைத்துக்கொண்டங்கே வந்தான். அரசன் மனைவிய ம்மாதர்களுடன் போனாள். அப்பொழுது பிஸானியோ தன்னுடைய எஜமானனுக்கு விரோதமா யேதாவது செய்வேனானால் நான் குத்திக்கொ ண்டு உயிரை விடுவேனென்று தனக்குள்ளே சொல்லிப்போய் விட்டான்.

வி. கோபால அய்யங்கார் பி. ஏ.

புற்புலத்து நெட்டிலிங்கமையர் வைபவம்.

(முன்தொடர்ச்சி.)

புற்புலத்து ஏரி.—இவ்வளவுதூரம் நாமிங்கு சொன்னதற்கு தாற்பரி யம் புற்புலம் என்று இந்த கிராமத்துக்கு பெயர் வந்தகாரணத்தை எடுத் துக்காட்டியபடி இந்த புற்புலம் பெருஞ்சீரகவல்லியின் வட பாகத்தில் ஒரு உபகிராமம் என்று சொன்னோமே. கொஞ்சம் வடகிழக்காகவு மிருக் கும். பொன்னியிலிருந்து ஒரு வாய்க்கால் பிரிந்து புற்புலத்தின் வடபாக த்திலிருக்கும் ஒரு பெரிய ஏரியில் வந்து விழும். புற்புலத்தில் நிலம் மேட் டுப்பாங்கானபடியால் இந்த ஏரியில் காலின் வழியாய் பிரவாக காலத்தில் நீர்கட்டிக்கொண்டு தான் சாகுபடி செய்வார்கள். சமீபத்தில் பொன்னி ஓடியபோதிலும் புற்புலத்தில் ஒரு போகப்பயிராவது இந்தக் காரணத்தி னாலேதான் வருஷத்திற்கு 4,5 மாதம் ஏரியின் ஜலம் நிற்கும். அப்போது தான் வியவசாயம் பாக்கி காலங்களில் ஏரி வறண்டுபோகும்போது அதை யும் விடாமல் உள்வாயில் வெள்ளரி, பறங்கி முதலிய சீக்கிரத்தில் பயிரா கக்கூடிய பயிர்கள் போட்டு வெள்ளரிக்காயை பட்டணத்தில் விற்று பறங் கிப்பழங்களை வருஷாந்திர சாப்பாட்டுக்கு உடையவர்கள் வைத்துக்கொள் ளுவார்கள். புற்புலத்தின் ஏரி ஒரு நதிக்காலின் முடிவாகையால் சாதார ணமானதல்ல; 3-மைல் நீளமும் $\frac{3}{4}$-மைல் அகலமும் உள்ளது. கரைகள் முற்றிலும் கோழாங்கற்களால் கட்டப்பட்டு ஜலம் நிறைந்து நிற்கும் கால த்தில்பார்த்தால் சமுத்திரம் பெருகியது போலிருக்கும். கரையில் நிற்

கும் ஆட்டங்களை அலைபினால் தெரிக்கும் ஜலக்கணங்கள் ஒருக்ஷணத்தில் நனைத்துவிடும். சீரகவல்லி ஜில்லாவிலேயே அவ்வளவு அழகாகவும் அவ்வளவு நீர்ப்பரப்புமுள்ள ஏரி ஒரு இடத்திலும் கிடையாது. பொன்னி, நதிக்குள் எவ்வளவு கம்பீரமாய் விளங்குகிறாளோ அவ்வளவு கம்பீரமாய் புற்புலத்தின் ஏரி, ஏரிகளுக்குள் விளங்கிற்று. ஏரியோரம் முடிய நாணற்புல்லும் ஒடையில் நடப்பட்டு கோழாங்கற் கட்டுடன் ஏரியின் அணையை ரட்சிக்கும். இக்கரையின்மீது நடப்பவர்களின் ஆனந்தமே ஆனந்தம். புற்புலம் ஒரு பெரிய ஊர். சிரகவல்லிக்கு ஒரு உபகிராமமாயிருப்பினும் அதை ஒரு தனிக்கிராமமாகவே ஆங்கிலேயர் ஆளுகையில் நிர்ணயித்திருக்கிறார்கள்.

புற்புலத்து புலன்கள்.—அந்த ஊரில் நன்செய் நிலங்கள் 1000 ஏகராவுக்குக் குறையாமலும் புன்செய் நிலங்கள் 500 ஏகராவுக்குக் குறையாமலும் உண்டு. இவைகளல்லாமல் 1500 ஏகரா காடுகரை தரிசு முதலிய புறம்ரைகளுமுண்டு. பயிர்காலத்தில் பார்த்தாற்றான் அங்கு நெல் சாகுபடியாகும் என்று ஜனங்கள் ஊகிக்கக்கூடுமேயல்லாது மற்ற காலங்களில் பார்த்தால் ஒரே பொட்டலாகவும் நிலமாகவும் இருக்கும். ஒரு மழை தூறிவிட்டாலோ சேர் நடப்பவர்கள் காலை முழங்கால் வரையில் உள்ளே இழுத்துக்கொள்ளும். ஒவ்வொரு சமயத்தில் ஏரி எங்கேயாவதுகொஞ்சம் முடைந்து விட்டாலோ அப்புறம் 4 - மாதகாலம் சீரகவல்லிக்கு போக்குவரவேயிருக்காது. தரிசு நிலங்களில் சப்பாத்தும்காரைச்செடியும் வெகு அதிகம். இவைகள் ஆடுமேய வெகு சாதகமாயிருப்பினும் மனிதர்கள் இதில் நடக்க வெகு வருத்தமாயிருக்கும். வெள்ளைக்கற்கள் காலை முள்ளுபோல் குத்தும். அது தப்பினால் காரைமுள் காலில் ஒரே பாய்ச்சலாய்ப்பாய்ந்துவிடும். ஆகையால் இந்த ஊரில் நாசூக்காயிருப்பவர்கள் நிர்வகிக்கமுடியாது; முரடர்களுக்கேற்ற ஊர். சப்பாத்தில் 100, 200 வயதுள்ள கருநாகங்கள் உண்டு. ஆனால் அநேக சமயங்களில் மனிதர்கண்களில் அவைகள் தென்பட்டபோதிலும் அவைகளால் மாட்டுக்காவது மனிதர்களுக்காவது ஒருவித இம்சையுமில்லை என்றும், அப்படி உபத்திரவமில்லாமல் ரக்ஷிக்கப்பட்டது புற்புலத்தின் சங்கிலிக்கருப்பு என்னும் தெய்வம் என்றும் உடையார்களுடைய கொள்கை. புற்புலத்தின் எல்லாக்காடுகள் வெகு விசித்திரமாயிருக்கும். ஒரு மைல் நீளம் ஒரு மைல் அகலம் ஒரே மாதிரி கழக்கொடி கழக்கொடியாய் மணிக்கற்கள் வெகு சிரமப்பட்டு புறப்பட்டதுபோல தென்படும். அது மனிதனால் செய்யப்பட்டதல்ல. நிலத்தின் பாங்கேயாம். அவ்வித நிலங்கள் படிப்படியாய் உயர்ந்திருப்பதால் அடி நிலங்களில் ஜலக்கசிவுண்டாகும். அந்த தீர்த்தம் அருந்துவதற்கு வெகு ருசியாயிருக்கும் மணியாம்பருக்கைபோன்ற சிறு கற்கள் நிறைந்து நிற்கும் தரையிலிருந்து

ஊற்றங்கண்டு கிளம்புகிறபடியால் அந்த ஜலம் தேகத்துக்கு ஆரோக்யமுமாம்.

புலியூற்று.—புற்புலத்தின் வடபாகத்தில் ஒரு சிறுகுன்று ஒன்றுண்டு அதில் **புலியூற்று** என்ற பெயருள்ள ஒரு சிறு ஊற்று கற்பாறை விறலினின்று ஓடிவருகின்றது. இந்தக்காட்சி பார்ப்பதற்குவெகுஆனந்தகரமாயிருக்கும். எப்படி அந்த தீர்த்தம் வருகிறது என்று கேட்கவேவேண்டியதில்லை. அது சங்கிலிக்கருப்பின் சாமர்த்தியம் என்று ஒரே மறுமொழி அங்கிருப்பவர்கள் அளிப்பார்கள். துவாதசவருஷப் பஞ்சத்திலும் அருங்கோடையிலும் புலியூற்று வற்றாமல் ஓடிக்கொண்டேயிருக்கும். புற்புலத்துக்கும் இந்தவூற்றிருக்குமிடத்துக்கும் சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரமாகையால் ஜனங்கள் விசேஷமாய் அந்தத்தீர்த்தத்தை நாடிப்போவதேயில்லை. ஆனால் அதைப் போய் கொண்டுவருகிறசிரமம் மட்டும் ஒரு நாளும் வீண்போனதேயில்லை. சர்வவிதத்திலும் சிலாக்யமான தீர்த்தம் என்று எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தண்ணீரின் ஆரோக்கிய குணம்அப்படிநிற்கட்டும்.பார்ப்பவர்கள் மனதைக்களிப்பிக்க அதின் காட்சி ஒன்றேபோதும். இந்த மழைபெய்தால் அதிகமாய் ஜலம் விழும். மற்ற காலங்களில் கொஞ்சமாவது ஜலம் ஓடிக்கொண்டேயிருக்கும். அந்த ஊற்றைநம்பி 20 காணி நிலம் அதற்குச் சமீபத்தில் சாகுபடியாகின்றது. இந்த நிலத்துக்கு ஆங்கிலேயர் முதற்றரமான நஞ்செய்த்தீர்வை போட்டிருக்கிறார்கள்.

மர்க்கடதோப்பு.—இந்தப்புலியூற்றுக்கு அருகாமையிற்றான் **மர்க்கட தோப்பு.** இதன் பெயருக்கு அமைந்த குரங்குகள் ஆயிரக்கணக்காய் இதிலுண்டு. தோப்பு ஒருவருக்கும்சுவாதீனமில்லை. ஸர்க்காரைச்சேர்ந்தது. ஜனங்களுக்கு தங்கள் உபயோகத்துக்குமட்டில் மரம் வெட்டும் சுவாதீனம் உண்டு. மற்ற சுவாதீனமெல்லாம் மர்க்கடங்களைச் சேர்ந்தவை. தோப்பிலுண்டாகும் பலவித தழைகளையும் தின்றுகொண்டு பெரிய குடும்பங்களாய் அநேகமாயிரம் குரங்குகளிவ்விடத்தில் ஒருவிதபயமும் நிர்ப்பந்தமுமில்லாமல் தோப்புக்குவருகிறவர்களைபயமுறுத்திக்கொண்டும், நிர்ப்பந்தப்படுத்திக்கொண்டும்வாழுகின்றன. அவ்விடத்தில் போய் அவைகளின் சேஷ்டையைப்பார்த்தால் அத்யானந்தமாயிருக்கும். ஊருக்கு இவ்வளவுசமீபத்திலிருந்தபோதிலும் தோப்பின் எல்லையை ஒரு மயிரிழைகூட கடந்து அந்த குரங்குகள் அப்புறம் வந்ததில்லை. ஏன்? அதுவும்புற்புலத்தின் சங்கிலிக்கருப்பின்மகாத்மியந்தான். இந்தத் தோப்பில் அநேக மரங்கள் அடர்ந்து ஒரேகாடாயிருக்கும். அவ்வூர் ஜனங்கள் தங்கள் வியவசாயத் தொழிலுக்கும் வீட்டிற்கும் என்னதான் வெட்டினபோதினும் அந்தக்காடு கொஞ்சமேனும் குறைந்ததே

யில்லை. அந்தக்காட்டில் சொய்யா, நெல்லி, கருவேப்பிலை, மா, பலா, முதலான பல விருக்ஷங்கள் வெகுவாய் உண்டு. அந்தந்த காலங்களில் அவைகளின் பலனை ஜனங்கள் அனுபவிப்பார்கள். பலம் ஏராளமாகையால் ஒருவனுக்கு குறைச்சல் ஒருவனுக்கு ஜாஸ்தி மற்றொருவனுக்கு இல்லை என்னும் பட்சபாதமேயில்லாமல அந்தத் தோப்பு ஓரே மாதிரியாய் எல்லாருக்கும் ஏராளமாய் பலனைக் கொடுக்கும்.

தடாகங்கள்.—அந்தத்தோப்பில் மேல்புறத்தில் **ஊருணி** என்ற சிறு தடாகம் ஒன்றும், வடபுறத்தில் **தச்சன் குளம்** என்ற ஒரு பெரிய தடாகமும் உண்டு. ஊருணி என்பது புற்புலத்தை ஒட்டியும் தச்சன் குளம் புற்புலத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலுமிருக்கிறபடியால் விசேஷமாய் ஜனங்கள் ஊருணியில் முழுகுவார்கள். ஊருணிக்கரை முடிய நாவைவிருக்ஷம் நிறைந்திருக்கும். இவைகள் மாடு மேய்ப்பவர்களுடைய மனோரஞ்சனம். மாட்டை எதாவது ஒரு புற்றரையில் ஓட்டிவிட்டு மாட்டுக்காரர்கள் இம்மரங்களில் ஏறி வயிறு இடங் கொடுத்தமட்டும் கனிகளைப் புசிப்பார்கள். தச்சன்குளம் வெகு சிலாக்கியமான தீர்த்தம். புலியூற்றுக்கு அடுத்த பதவியில் தச்சன் குளத்தின் தீர்த்தத்தைபுற்புலத்தார்கள் சிலாகிக்கிறார்கள். வெகுவாய் தலை முழுகுவது ஊருணியிலானாலும் துணி துவைப்பதும் குடிக்க தீர்த்தம் கொண்டுவருவதும் தச்சன் குளத்தில். இந்த தச்சன் குளத்தின் காட்சி வெகு ஆனந்தத்தைக் கொடுக்கும். அந்த ஸரஸைக்கண்டு தரிசித்தவர்களுக்குத்தான் அந்த ஆனந்தம் தெரியுமேயல்லாது மற்றவர்களுக்கு என்ன வருணித்தாலும்பாதியும் புலப்படாது. அந்த ஸரோவரம் மற்ற தடாகங்களைப்போல் ஆற்றுவெள்ளநீரால் நிரப்பப் படாமல் கேவலம் மழை நீரால நிறைந்த குளம். வெகு ஆழமாகையால் அதில் கொஞ்சம் ஸ்வயமாகவே ஊற்றும் உண்டாகும். அதின் முப்புறங்களிலும் சிறு குன்றுகள் வெகு அழகாய் அமைந்திருக்கின்றன. அவைகளில் பொழியும் மழை அவ்வளவும் தச்சன் குளத்தில் வந்து நிற்கும். அக்குன்றுகள் சிறுமணிக்கற்களால் நிறைந்தகுன்றுகளாகையால் அவைகளில் விழும் மழை கற்களில் முதலில சுவறி அவைகளால் வடிக்கப்பட்ட ஜலம் தச்சன் குளத்தில் வந்து பாயும், தச்சன் குளத்தில் ஒரு தடவை தலை முழுகினால் அப்புறம் ஒருமாதம் எண்ணெயே வேண்டியதில்லை என்றும், அதன் தீர்த்தம் கருப்பஞ்சாரத்தை ருசியுள்ளதென்றும் அதில் துணியை ஒருதடவை போட்டு எடுத்தால் அது துலங்கியிருக்கும் என்றும், ஜனங்களின் கொள்கை. அது அபிமானத்தாலுண்டான சொற்களல்ல. அவ்வளவும் உண்மையே. பகல் பதினைந்து நாழிகை வேளையில் சிரமப்பட்டு சவித்துவந்து தச்சன் குளக்கரையில் ஒரு நிமிஷமுட்கார்ந்தால் போதும்.

குளுமையாய் அடிக்கும் மிருதுவான மந்தமாருதம் எவ்வித அலுப்பையும் அரைநொடியில் வாங்கிவிடும். அக்குளத்தின் மத்தியில் வெற்றிலை போன்ற ஓர்விதப்பாசி உண்டு. அது அதிகமாய் அபிவிர்த்தியாய் குளத்தை மூடாமல் அங்குமிங்கும் மருந்துபோல் கொஞ்சங் கொஞ்சமாயிருக்கும். அதிலிருந்து உற்பத்தியான மெல்லியதாகிய கொடி ஆயிரம் முறுக்கு முறுக்கப்பட்ட நெல்லிய தாமிரக்கம்பியைப்போல் அப்போதைக்கப்போது முறிபட்டோ அறுபட்டோ கரையோரம்வந்து ஒதுங்கும். அதை ஒவ்வொருவரும் ஆனந்தமாய் எடுத்துப்பார்த்து ஆச்சரியப்படுவார்கள். இவ்வகைப் பாசி இத்தச்சன் குளத்துக்கு என்று அச்சன் சிருஷ்டித்தானோ என்பதாய் வியப்படைவார்கள். இன்னும் இரண்டு கொடிகள் கிடைக்காதா என்று ஆவல் அதிகமாகுமேயல்லாது, பாசிதான் அது அதை ஒரு ஆச்சரியமாய் எடுத்துப் பார்ப்பானேன் என்று அசிலாக்யம் மனதில் உதிக்காது. சுறுக்கிச்சொல்ல புற்புலத்தின் ஹிருதய கமலம் என்று இந்த தடாகத்தைச் சொல்லலாம்.

மாதர்மித்திரன்.

இந்துப்பெண்களின் கல்வியுணர்ச்சி.

நமது காருண்ய சக்கிரவர்த்தினியாரது ஆளுகையினால், தற்காலநிலைமை பெண்கல்வியில் ஆவல் பரவியிருப்பதாகவே சொல்லலாம். ஆயினும் அக்கல்வியானது போதுமான அளவிற்குச் சீர்ப்பட்டிருப்பதாகக் கூறவிடமில்லை. நமது சிறுமிகளும் கல்வியினாலடையக்கூடிய முழு இலாபங்களையுமடைந்து சிறக்கவில்லை. கற்பது போலிக்கல்வியும், போலிச்சிறப்பும் தான். இவ்விதபோலிக்கல்வி கற்கும் சிறுமிகளினும் 100-க்கு ஒருவர் இருவர் பாடசாலை துறந்தபின்னும் கல்வியாசைமாறாது எழுதவும் படிக்கவும் ஆவது ஆற்றலுடையவராகின்றனர். சிலர், அச்செழுத்துமட்டில் படிக்கக்கூடியவராகின்றனர். இதனாலேயே மற்றப்பெருந்தொகைப் பெண்பிள்ளைகள் எல்லாம் படிப்பைப் பாடசாலையிலுள்ள உபாத்தியாயர்கட்கு குருதட்சணையாகவளித்து, நிம்மதியாய் வீடுவந்து சேர்ந்து விடுகிறார்களென்பது சொல்லாமல் விளங்குகின்றதன்றோ; இதுவன்றி, தெய்வபக்தி, ஆசாரம், அடக்கம், கற்பு, பொறுமைஇது போன்ற நற்குணங்களை விருத்திசெய்விக்கும் சிறந்த நூல்களைக் கற்றுத்தெளிந்து சீர்படும் பெண்கள் ஆயிரத்திற்கு ஒருவர் இருவா இருப்பதாகவுங்கூறத் துணிவுபிறக்கவில்லை. முற்றும் இல்லையெனக்கூறுதலும் பொருந்தாது. ஆகவே அவ்வாறு எங்கோ அருமருந்துபோல் அபூர்வமாயிருக்கும். பதியினிடத்தில் உண்

மையான மதிப்பும் விசுவாசமும் பாராட்டவிரும்பும் பெண்களோ மிகச் சொற்பம். இதற்கு மேற்படி இனத்தாரால் விளையும் இடையூறுகளும் இகழ்ச்சிச்சொற்களும் அனுபவத்தாலன்றி சரிவர இவ்வளவென அளவிடுதல் சாத்தியமல்ல. இதுவும் போதாமல் இது விஷயத்தில் விரோதக் கொள்கையுள்ள ஆடவர்களின் நிர்ப்பந்தமுள்ள இடங்களுமநேகம். இவ்வித நிலையிலுள்ள ஓர் பெண்ணுக்கு கல்வி நேசமும் நற்குணமும் அமைந்திருப்பினும் தனது புலமையை விர்த்திசெய்து கொள்ளும் மனோதைரியம் பெறுவது மிகக்கடினமென்பது கூறுமலே விளங்குமன்றோ? ஆதலின் பூர்வத்தில் செய்துள்ள நல்வினை முதிர்ச்சியும் சிவாநுக்கிரகமும் பரிபூரணமாய்ப் பெற்றிருந்தாலன்றி ஓர் கல்விநேசம்வாய்ந்த பெண் தன்கல்வியைச் சோரவிடாமல் முன்னுக்குக் கொண்டுவருதல் அருமையருமை. இத்தகைய நாகரீகக்கொள்கை ஆடவரது நன்முயற்சியாலும், கற்றமாதர்களது இடையறு ஊக்கத்தாலுமே, நாளடைவில் மாறக்கூடுமன்றிவேறில்லை. மேற்கூறிய நன்முயற்சியும் ஊக்கமும் நாளடைவில் செழித்தோங்குமாறு கடவுளருளைக் கோரி பேசப்புகுந்த விஷயமாகிய பெண்கல்விக்குள்ள பெரும்பிழைகளின் தன்மை இத்தகையதென விதனைப்படுப்போர் எளிதிலுணர்ந்து இரக்கமெய்தி தத்தமக்கியன்றவரையிலு மிவ்வறியாமையை நீக்க முயலுவாரென விரும்பி உதாரணமாக எழுதப்புகுந்த சிலவற்றையடியில் வருமாறு காண்க.

இதனுள் இந்துகுடும்பங்களில் வகுப்பிற்கொரு பாணியாகக்கல்லா மகளிர்கள் பேசும் முறைகேடான வழக்குச் சொற்களை மிகுதியும்உபயோகிக்கின், பெரும் பான்மையும் விகடப்பேச்சாக ஊகிக்கப்படுமாதலினும், நமக்கு விஷயத்தையல்லாதவைகளில் ஊக்கத்தையும் காலத்தையும், செலவிடுதல் கடனன்றாதலினும், அவ்வாறீண்டு வரையத்துணிந்திலம்.

பெண்கல்வியின்மையினால், வயதில் முதிர்ந்த மங்கையரும், இளைய மாதர்களும், தங்கள் பொழுதை எவ்வாறு கழிக்கின்றாரென்பதையும், ஜீவகாருணியம் இன்னதெனச்சிறிது முணராத கொடுமை எவ்வளவிற்கு செழித்து மேற்படியாருள்ளத்து நடைபெற்று வருகிறதென்பதையும். இடையிடையில் உணர்ந்து கொள்க.

உயர்குலத்தாரில் நடைபெறும் புக்ககப்புதுக்கொடுமைகளையும் சுருக்கமாய் விளக்கப்படும். இச்சம்பாஷணையானது, மிகச்சிறுவர்களும் படித்தல் அவசியமென்றும், அவ்வாறே படித்து நமக்குள் நிறைந்துகிடக்கும் அநாகரீகக்கொள்கைகளையும், அறிவின்மையையும் ஆதிபத்தியத்தையும் விளங்க வுணர்ந்து, அவைகள் தேய்ந்து அழிவுறுமாறு (தாங்களும் பெண்

கல்வியில் நேரக்கூடிய பயன்களைக்கருதி அதனை விர்த்திசெய்யும் ஊக்கத்திற்சிறிதும் சோர்வடையாமல்) முயன்று சுகம்பெறவேண்டுமென்பதுமே எமது கோரிக்கை. ஏனெனின் இந்துச் சிறுவர்களுக்கு இக்குறைபாடுகள் தோன்றுதாயின், நமது ஏழைமைச்சிறுமிகட்கு மட்டில் மேற்கண்ட குறைகள் தோன்றுவதனால் யாதும் பயன் பெற முடியாது. சென்ற பிப்பிரவரிமீ 9உயில் வெளியான சுதேசமித்திரனில் பிரசுரமான "பெண் கல்வியின் பெருமையும் அஃதில்லாச் சிறுமையும்" எனும் ஆர்டிகிலிலும், இதே குறிப்புடன் பெண்கல்வி விர்த்தியடையவில்லை யென்பதற்கு அறிகுறி இந்நாட்டினது ஆண்கல்வி சிறக்கவில்லை யெனக் கொள்ளவேண்டுமெனக்கூறியுள்ளோம். அம்மொழி இக்கடிதத்தில் மேலே கூறிவந்ததை வலியுறுத்துகிறது.

சிறுவர்களும் என உம்மை கொடுத்துக்கூறியதனாலேயே சிறுமிகளும் படித்தல் அவசியமென்பது இனிது விளங்குகின்றது.

அசலாம்பிகை அம்மாள்.

(இன்னும்வரும்).

மாயாபுரி விநோதக்கதை.

அவன் உங்களை பரிபாலிப்பான். அதுவரைக்கும் நீ என் பக்தனுகிய ஓர் வேளாளப்பிரபு உன்னை ஆதரிப்பான். எந்தவிடத்திலுன்னை யோர் வேளாளப்பிரபு கண்டு தன்னிடத்திலிருக்கவேண்டுகிறானே? அவ்விடத்திலேயே யிரு என்றுகூறி மறைந்தருளினர். நான் ஆண்டவன் ஆக்கினையை கடக்கவஞ்சி, என் மனையாளுக்கு இரகசியமாகக்கூறினதில் அவள் எதுவந்தாலு மனுபவிக்க வேண்டியதுதானே. தாங்கள் எங்கேயிருந்தாலு மவ்விடமே யெனக்குச் சுவர்க்கம்போன்றிருக்குமாதலால் நான் தனித்திருக்கமாட்டேன், கூடவரச் சித்தமாயிருக்கிறேன் என்றாள். பின்பு அரசனிறந்த மூன்றுநாள் என் பரிசாரகனோடிவந்து அப்பா அரசனிறந்தது நீ யறிவாயே, யாரோ சில துரோகிகள், அதற்கு நீயே காரணமென்று சொன்னதினால் புத்தியில்லாத அரசிளங்குமரன் நமது வீடு முதலிய சகல சொத்துக்களையுங் கைப்பற்றிக்கொண்டது மன்றி,உன்னைக்கைப்பிடியாகப் பிடித்துவரும்படி சேவகர்களை யேவியிருக்கிறான். நம்முடைய சேவகன் உம்மையிக்கணமே யிவ்விடம் விட்டோடிப்போகும்படி சொல்லச்சொன்னான். இப்பொழுதே புறப்பட்டு விடியுமுன் நெடுந்தூரம் போய்விடவேண்டும். புறப்படு சீக்கிரம் போ சீக்கிரம் போமென்று துரிதப்படுத்தினன். உட

னே என் மனைவியை யழைத்துக்கொண்டு, ஒருவரோடுஞ் சொல்லிக்கொள்ளாமல் விடியுமுன் நாலுகாதம் வந்துவிட்டோம். என் பரிசாரகனை நோக்கி நீ ஊர்போய்ச் சேர்ந்து நடக்கிற காரியங்களைக் கவனித்திருவென்று அனுப்பினேன். அவன் தன்னிடத்திலிருந்த சொற்ப பணத்தை யென்னிடங் கொடுத்துப் போய்விட்டான். பிறகு நான் எங்கே சேவகர்கள் கண்டு பிடிப்பார்களோவென்று பயந்து பகல் முழுதுங் காட்டுவழியாக நடந்து வந்து, அங்கே யோரிடத்தில் சிறுகுளமும், கோவிலுமிருக்கக்கண்டு, வைதிககிரியை யாதிகளை முடித்துக்கொண்டு புறப்பட்டு நெடுந்தூரம்வந்து இரவு ஒரு ஊரில் தங்கி நித்திரையின்றி யிருக்கையில் ஆண்டவன் வெளிப்பட்டு, "உன்னையொருவரும் பாராவண்ணங்காப்பேன்; நீ கவலையற்றிரு நான் குறித்தவிடம் போய்ச்சேரு" என்று மறைந்தருளினர். பிறகு நான் பயமற்று, என்று நடந்தறியாத மனைவியையுங் குழந்தையையும், கூட்டிக்கொண்டு எட்டுநாளாக மெதுவாய் நடந்திவ்விடம்வந்து சேர்ந்தேன். உம்மைக்கண்டு சிநேகங்கொண்டேன் என்று கூறி முடித்தார்.

பிள்ளையவர்களும், மஹாலட்சுமி முதலானவர்களும், சந்தோஷமும், வருத்தமுமடைந்து சுவாமீ தாங்கள் கவலையின்றி யிவ்விடத்திலிருங்கள் என்று மனங்களித்துக்கூறினார்கள். ஐயரவர்கள் பிள்ளையவர்களைப்பார்த்து உமதுவரலாறு கேட்கப் பிரியமாயிருக்கிறேனெனப் பிள்ளையவர்கள் சொல்லத்தொடங்கினர்.

சுவாமீ, தமது பூர்வபிதாக்கள் மந்திரத்தலைமை வகித்து ராஜ்யபாரம் நடத்தி வருங்காலத்தில் எனதுமூன்றும் பாட்டனர் நமதரசனிடத்தில் சேனாதிபதியாக விருந்தார். அப்போது காட்டியவீரபராக்கிரமத்துக்குப் பரிசாக இதனோடுகூட மூன்று கிராமங்கள் சர்வமானியமாக வளிக்கப்பட்டன. என் பாட்டனருக்கு நாலு குமாரர்கள் பிறந்தார்கள். என் தகப்பனார் தாம் நாலாவது குமாரர். அவர் கல்விப் பிரியராய்ப் பலகலைகளைக் கற்றுப் பிராமண விசுவாசமும், தேவபக்தியுமுடையவராய்ப் பல தான தருமங்களைச் செய்துகொண்டிருந்தார். பெரியோர்களைத் தரிசிப்பதும், சாஸ்திரவாராய்ச்சி செய்வதுமேயவர்க்குத் தொழிலாகவிருந்தது. குடும்பத்தைக் கவனிப்பதே யில்லை. மற்றைய மூவரும் நாஸ்திகர்போல சிற்றின்பத்தின் மூழ்கி, உண்பது முடுப்பதுந் தாசிவேசிகளோடு விளையாடித்திரிவதுமே அவர்களுக்கு காலப்போக்காயிருந்தது. பாட்டனர் எனது தந்தையின் நற்குண நற்செய்கைகளைக்கண்டு அவரை யதிகமாக நேசித்தார். இது மற்ற மூவருமெனது பிதாவை விரோதிக்கவேதுவாயிற்று. நான் பிறந்த ஐந்தாம் வருஷத்தில் என்பிதா சிவபதஞ் சேர்ந்தார். அத்துயரந்

தாங்கமாட்டாத என்மாதா அதே வியாதியாகவிருந்து சிறிது நாளிற் பிதாவிடந் தேடிச்சென்றாள். நானொருமற்ற சிறு குழந்தையாயிருந்தபடியால் என் பாட்டனார் என்மேல் தமது அன்பை வைத்து, க்ஷணப்பொழுது மென்னைவிட்டுப் பிரிய மனமில்லாதவராய்ச் சதாகாலமுமென்னைக் கூடவைத்து விளையாடிக்கொண்டேயிருந்து, தகுந்த உபாத்தியாரைக் கொண்டு கல்வி பயிற்றுவித்தும் வந்தார். நான் கல்வியிற்சிறந்து தெய்வ பக்திமுதலியவற்றிலென் பிதாவைப்போலவே விருப்புற்றிருப்பதுகண்டு, பதினெட்டாம்வயதில்விவாகஞ்செய்துமுடித்து,மருமகளுடைய குணாதிசயங்களைக்கண்டு மகிழ்ந்திருக்குங் காலத்தில், தமக்கு மூப்புமேலிட்டபடியாலும், நான் பாலியனாய், வம்பு, சண்டைகளுக் கேலாதவனாகவிருப்பதாலும், பெரியதகப்பன் மூவரும் துஷ்டர்களாயும், துர்ச்செலவு செய்பவராயு மிருப்பதுகண்டு தாமிருக்கும்போதே பாகம்பிரித்துவிட உத்தேசித்தார். இது தெரிந்த பெரியதகப்பன்மார் வீடு நிலமுந்தவிர மற்றச்சொத்துக்கள் யாவற்றையுமிரகசியமாக வப்புறப்படுத்திவிட்டார்கள். அன்றியும் என் தகப்பனார் ஆண்டிபரதேசிகளுக்குச் சொத்துகளை வாரிக்கொடுத்தழித்து விட்டாரென்றும், தாங்களொரு செலவுஞ் செய்ததில்லையென்றும் கூறிச் சண்டையிட்டுத் தங்களுக்கதிகபாகங் கிடைக்கவேண்டுமென்றும் வழக்காடி என் பாட்டனாரைத் துன்பப்படுத்தினார்கள். அவர் யாதுசெய்வதென்றுணராமல் மதிமயங்கி வருந்துகிறதை நான் கண்டு தாதா! உங்களுக் கேனிந்தக்கவலை. அவர்களிஷ்டப்படியே நடத்துங்கள். எனக்குத் தெய்வந்துணை செய்யுமென்று வற்புறுத்திவேண்டிக்கொள்ள, அவர் அப்பனே, உன்தெய்வபக்தி உன்னைக் காக்கக்கடவதென்றுசீர்வதித்துச் சகல சொத்துக்களையு மவர்களுக்குக்கொடுத்துவிட்டு, என்னையழைத்துக் கொண்டிந்தக்கிராமத்துக்குவந்து தமது ஆயுள்காலமுழுவது மிங்கேயேயிருந்தார். இதோ இருக்கிற பெண் என்னுடைய பெரியதகப்பனார் பெண். என் மனைவியிடத்திலதிக நேசமுடையவளாதலால் தன் மாதா பிதாவை விட்டு என்னிடத்தில் வசிக்கிறாள். நான் வசிப்பதற்குத் தகுந்த வீடில்லாமையாலிந்த வீட்டைக் கட்டத்தொடங்கி அஸ்திபாரஞ் செய்கையில் சுவாமீ! தேவகிருபையாலெனக்குத் திரண்ட செல்வங்கிடைத்தது. நானுமனைவியுமது கண்டு மகிழ்ந்து, ஆண்டவன் கொடுத்ததிரவியத்தை அவலமாக்கக்கூடாதென்று, சத்திரங்கட்டுவித்து,நல்லோர் பெரியோர்களை உபசரித்துத் தரிசித்து வருகிறேன். தமதாண்டவனே யெனக்கும் வழிபடு கடவுளாதலால் சில நாளைக்குமுன் அவர் என் கனவில்தோன்றி வெகு சிக்கிரத்தில், பிராமண குலத்திற் பிறந்த என் பக்தனொருவன் இங்கே வரும்படி கட்டளையிட்டிருக்கிறேன். அவனைக்குருவாகக்கொண்டு

வழிபட்டு நற்கதியடையுங்கள் என்று சட்டளையிட்டருளினார். அச்சனவை யென்மனைவிக்குணர்த்தி யிருவருந் தமது வரவை யெதிர்நோக்கி யிருந் தோம். நாங்கள் நல்ல புண்ணியஞ் செய்திருந்தபடியால் தமது தரிசனங் கிடைக்கப்பெற்றோம். இனி நாங்கள் நடக்கவேண்டியதற் கநுக்கிரகஞ் செய்து, எங்குடி முழுமையு மடிமைகொண்டருளுமென்று மனைவியோடு திருவடிபணிந்து நின்றார். ஐயரவர்கள், பிள்ளையவர்களே நம்மை யடிமை கொண்ட கர்த்தன் செயல் நன்று நன்று. இனிநாமனமொத்து வாழ்ந்திரு ப்போம். நானிங்கிருக்குஞ் செய்தி பிறரறியாமற் காப்பாற்றுங்களென்று கூறினார். அப்படியே யாவருமொத்துக்கொண்டு மனமொருமித்து வாழ்ந் திருந்தார்கள்.

இப்படி யிருக்கச் சிவசுவாமி ஐயரவர்கள் செல்வக்குழந்தைக்கு ஜெக தீசனென்று பெயர்கூறி நாளொருமேனியும், பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவந்து, அவ்வக்காலங்களில் நடத்தவேண்டிய வைதிக கர்மங் களையுஞ் சீர்பெறச்செய்து வருகையில், ஐந்தாம்வயதில் அட்சராப்பியா சஞ் செய்துவைத்து, ஏழாம் வயதில் முறைப்படி உபநயனஞ் செய்து முடித்தார்கள். ஜகதீசனும் தன் தாய்தந்தைகளைத் தெய்வமாகக்கொண்டு வழிபட்டு, அவர்களுடைய மனதுக்கு மாறுபடாமல நடந்துகொண்டு, சகல கலைகளையும் தன் தந்தை பாலுணர்ந்து தெளிந்து சிறந்து, மிக விவேகமு டையவனாய் விளங்குவது கண்டு தாய் தந்தைகளும் பிள்ளை குடும்பமும் அவனைத் தம்முயிரின்மேம்பட்டவனாகக் கருதிப்போற்றி மகிழ்ந்தார்கள். ஜகதீசனுக்கும் பதினாலாம் வயது பிறந்தது. இங்ஙனமாக ஓர் நாளிரவில் யாவரும் போஜனஞ்செய்து நித்திரை செய்யப்போகுந் தருணத்தில் ஜக தீசன் முந்திப் படுத்துக்கொண்டு தான் கற்ற நூற்பொருளைச் சிந்தித்துக் கொண்டு தூங்குகிறவனைப் போல வார்த்தையாடாமலிருந்தான். சிவசு வாமி ஐயரும், விஜபலட்சுமியம்மாளும் தாம்பூலந்தரித்து, சிறிதுநேரம் விளையாட்டாகப்பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு விஜயலட்சுமி நாயக னைநோக்கிச் சுவாமீ நமது குழந்தைக்கு வயது பதினாலாகின்றதே; அவனு க்கு விவாகம் செய்விக்கவேண்டாமா? இது வரைக்கு மதைக்குறித்துப் பிரயத்தினஞ்செய்யவேயில்லையே; இனிச் சும்மாவிருக்கலாமோ வென்றாள். ஐயரவர்கள்ஆம் எனக்கந்த ஞாபகமுண்டு. எந்தவிடத்தில் பெண் பார்க்க லாமென்று யோசிக்கிறேன். நாம் நமது தேசத்துக்குப் போகக்கூடவில்லை. நமது ஜனங்களங்கேதானே மிகுந்திருக்கிறார்கள். வேறிடத்திற் பார்ப்ப தென்றால் குலகோத்திர விசாரணைசெய்து தகுந்த குடும்பத்திற் சம்பந்தஞ் செய்யவேண்டும். அதற்குத்தகுந்த காலம்வரவில்லை. ஆகட்டுமென்றார். விஜயலட்சுமி பிராணநாதா! கொங்குநாட்டில் அவிநாசி நகரில் தமது சகோ

தரி விசாலாட்சி அம்மாளிருக்கிறார்களே ; அந்த அம்மாள் நம்மிடத்தில் மிக்கநேசமுடையவர்களல்லவோ ? எட்டு வருஷங்களுக்குமுன் நாமங்கே போயிருந்தபோது அந்த அம்மாளுக்கு மங்களாம்பாளென்றொரு பெண் குழந்தை மிக சுந்தரமுடையதாயிருந்தது கண்டோமே. அந்தப்பெண் ணைத் தாய்தகப்பனிருவரும் நமது ஜகதீசனுக்குக் கொடுப்பதாக மனமொ த்துச் சொல்லவில்லையா ?

தேவதுஞ்சரி அம்மாள்.

(இன்னும் வரும்.)

மகாராணியின் இளம்பருவத்தைப் பற்றியகதை.

மகாராணியார் தமது தாயாருடன் ஒருதினம் நடப்பதற்காக உல்லா சமாகச் சென்றார்கள். மகாராணியார் குழந்தையாகையால் தமது தாயா ருடன் மெதுவாகப்போகாமல் முன்னால் வேகமாகச் சென்றார்கள். பின்பு தமது தாயாரும், வேலைக்காரியுமிருக்கிற விடத்திற்கு வேகமாய் திரும்பி ஓடி வரும்பொழுது இவர் வயதுள்ள ஒரு குடியானவன் பெண்ணைச் சந்தி த்தார். அவளுடன் இவரும்சிலபேச்சுகளைப்பேசியபின் "அம்மா என் நாய் மிகவும் களைத்திருக்கிறது. நீ தயவு செய்து அதை எடுத்துக்கொண்டு வருவாயா" எனக்கேட்டார்.

நல்ல குணமுள்ள அந்தச்சிறுபெண் அந்த நாயை எடுத்துக்கொண்டு ராணியாருடன் கொஞ்சதூரம் உல்லாசமாக பேசிக்கொண்டு நடந்து சென் றாள். இப்பெண்ணுக்கு இவர் மகாராணியாரெனத் தெரியாது. கொஞ் சதூரம் சென்றபின் அந்தப்பெண் ராணியாரைப் பார்த்து அம்மா "நானும் களைத்திருக்கிறேன். இனி உன் நாயை நான் கொஞ்சநாழிகை யேனும் தூக்கமுடியாது" என்று சொன்னாள். மகாராணியார் "அம்மா வாஸ்தவந்தான் முடியாதகாரியம். நீ அதைக்கொஞ்சதூரம் தான் தூக் கிக்கொண்டு வந்தாய்" என்று பதில் சொன்னார். அந்தப்பெண் அதற்கு "அவ்வளவு தூரம் போதும், மேலும் என்னுடைய அத்தை வீட்டிற்குப் போகிறேன், உன் நாயைத்தூக்க வேண்டுமானால் நீயே என் தூக்கிக்கொ ண்டுபோகக்கூடாதென்று" சொன்னாள். "உன்னுடைய அத்தையார்" என்று மகாராணியார் கேட்டபொழுது யந்திரம்வைத்திருக்கிறவருடைய மனைவியாகிய மிஸ்ஸஸ் ஜான்ஸ்டன் என்று சொன்னாள். அவள் எங்கே வசிக்கிறாளென மகாராணியார் கேட்டார். "குன்றுக்கு கீழ் அந்த சிறிய வெண்மையான வீட்டில் என் அத்தை வசிக்கிறாள்" என பதில் சொன் னாள். "உன் அத்தையை நான் பார்க்க விரும்புகிறேன். நான் உன்னுடன் வருகிறேன்; நாமிரண்டுபேரும் மலையின் அடிவாரத்திற்கு ஓடுவோம்" என

ச்சொன்னார். இவ்விதம் இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் தாதி ஓடி வந்து இராஜாத்தியே! போகக்கூடாது, போகக்கூடாது என்று அவர் கையைப்பிடித்துக்கொண்டு வெகு நாழிகையாக இந்தச் சிறு பெண்ணுடன் நீங்கள் பேசினீர்கள். இது போதும், உமது தாயார் தம்முடன் நடந்துபோக விரும்புகிறாரென சொன்னாள். இராஜாத்தியே என்று சொன்னபொழுது இந்தச்சிறிய பெண் திடுக்கிட்டு அதிக மரியாதையுடன் நின்றாள். உடனே மகாராணியாருடைய தாயார் அரைக்கிரௌன் அதாவது கூ 1-4 அ. அந்தப்பெண்ணுக்கு வெகுமதியளித்து அம்மா நீ வீட்டுக்குப்போ என்று அனுப்பி தமது குழந்தையுடன் வீட்டுக்குப்போனார். அந்தச் சிறு பெண் தனது அத்தை வீட்டுக்குப்போய் தான் மகாராணியாரைப் பார்த்ததாகவும் அவர் தனக்கு அரைக்கிரௌன் வெகுமதி கொடுத்ததாகவும் சொன்னாள். இவளுக்குக்கிடைத்த அந்தப் பணத்தை ஒரு படத்தில் வைத்து மகாராணியாரைப் பார்த்தகுறியாக அந்தப்பெண்ணின் அத்தை வீட்டில் தொங்கவிட்டிருந்தாளாம்.

NEWS & NOTES.

மகாராணியாரின் பிறந்த நாள் பண்டிகை அதாவது அப்தபூர்த்தி லண்டனில் மேமீ 24-உயிலும் கொண்டாடப்படும்.

பிரின்ஸ் ஆப்வேல்ஸின் ஜேஷ்ட புத்திரரான யார்க் பிரபுவுக்கு மற்றொரு ஆண் குழந்தை பிறந்தது. யார்க்பிரபுவுக்கு ஏற்கனவே இரண்டு குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையுமுண்டு, பிரின்ஸ் ஆப்வேல்ஸுக்கு வயது 59 - ஆகின்றது. யார்க் பிரபுவுக்கு வயது 35.

பிரான்சுதேசத்தில் தென்பாகத்திலுள்ள மர்சோல்ஸ் பட்டணத்தில் 5-அடி 3 அங்குலம் உயரமுள்ள ஒரு விருத்தாப்பியனிருக்கிறான். இவனுடைய தாடியின் நீளம் 10 அடி 10 அங்குலம், இவன் வெளியிற்போகும் போதுதான் தாடியைச் சுருட்டி கையில் பிடித்துக்கொண்டு போவானாம்.

உலகத்தில் 672 எரிமலைகளிருக்கின்றனவென கணக்கிடப்பட்டிருக்கிறது. இவைகளில் 270 மலைகள் மிகவும் மும்மரமாக எரியக்கூடியதாம். இவைகளில அமெரிக்காவில் 80-ம், ஆசியாவில் 24-ம். ஆப்பிரிக்காவில் 20-ம், ஜாவாவில் 28-ம், நியூஸிலாந்தில் 63-ம். ஆஸ்திரேலியாவில் 49-ம், ஒஷயானியாவில் 9-ம், ஜப்பானில் 7-ம் இருக்கின்றன.

சீனதேசத்தின் எல்லையில் ஒரு பெருஞ்சுவரிருக்கிறது. இது 18 அடி உயரமும், 1300 மைல் நீளமும் உடையதென்றும் இதன அஸ்திவாரம் முற்றிலும் கருங்கல்லினு

லும், மேற்கட்டு மிகுந்த பளுவான சட்டுவேலையினாலும் செய்யப்பட்டிருக்கிறதென்றும் ஒரு அமெரிக்கா தேசத்து இஞ்சினீயர் சொல்லுகிறாராம். இச்சுவர் உலகத்திலுள்ள அற்புதங்களிலொன்றென்று சொல்லலாம்.

யாழ்ப்பாணத்தில் போலீஸ் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் தீ. எம். தம்பு அவர்களுடைய இளைய குமாரத்தி **மிஸ்கிரேஸ் நல்லம்மதம்பு** என்ற மாது அங்கு நடத்தப்படும் கேம்பிரிட்ஜ்ஜூனியர் பரீக்ஷையில் தேறியிருக்கிறாரென திராவிட கோகிலமென்ற பத்திரிகைக் கூறுகிறது. இம்மாது யாழ்ப்பாணத்தில் இப்பரீக்ஷையிற்றேறியது இது தான் முதற்றடவையெனவும் கேட்டு மிக சந்தோஷப்படுகிறோம்.

திருப்பதியிலுள்ள பெண் பாடசாலையை நம் சென்னையிலுள்ள கோடீசுவரப்பிரபுவாகிய மெஷர்ஸ் லாட் கிருஷ்ணதாஸ் பாலமுகுந்ததாஸவும், லாட் கோவிந்ததாஸவும் நடத்தப்போகிறார்களாம். மேலும் அங்கேயே ஒரு கட்டிடம் அப்பாடசாலைக்காக கட்டதீர்மானித்திருக்கிறார்களாம். திரவியவந்தர்கள் தங்கள் திரவியத்தை இப்படியன்றோ செலவிடவேண்டும். இவர்களுக்கு ஈசன் தீர்க்காயுளளிப்பாராக.

நாகைடவுன்ரேஞ்சு சால்ட்-சப்இனிஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ கிருஸ்ணசாமி ஐயங்கார் அவர்களின் புத்திரன் இராஜகோபால மென்னும் ஐந்து வயதுக்குழந்தை ஒருவரும் கற்பித்துக்கொடுக்காமலே யெந்தவிதமான கடினசங்கீதப்பாட்டுகளுக்கும் தாளம் தவறுதலில்லாமல் வெகு நேர்த்தியாகக் சங்கீதவித்வான் களெல்லாம் மெச்சும்படி மிருதங்கம் வாசித்து வருகிறானென சுதேசமித்திரன் கூறுகிறது. இது ஆச்சரியமேயாம்.

சென்ற மீ **லேடிராபர்ட்ஸ்** அம்மாள் நமது கருணைபொருந்திய மகாராணியவர்களைப்போய்ப் பார்த்து பேசிக்கொண்டிருந்தார் பேசியபின் மகாராணியார் ஒரு சிறிய மூட்டையை லேடி ராபர்ட்ஸ் அம்மனின் கையில் கொடுத்து "வீடு்போகிறவரையில் நான் கொடுக்கும் இந்தப்பொருளைத்திறந்து பாராதேயுங்கள்" என்று சொல்லி அனுப்பினார். அந்தம்மாள் அவ்விதமே வீடு சென்று மிக ஆவலுடன் அந்தப்பெட்டியைத் திறந்து பார்க்க அதில் அந்தம்மாளின் புத்திரன் கொலன்ஸோ சண்டையில் உயிர்விடுமுன் அடைந்த வெற்றிக்கடையாளமாய்க் கொடுககப்பட்ட "**விக்டோரியா கிராஸ்**" என்னும் விருது சின்னத்தைக்கண்டு ஆநந்தமடைந்தார்.

சென்ற ஏப்ரல்மீ 14உ சனிக்கிழமையன்று பாரிஸில் பல பொருட்காட்சி சாலைத்திறக்கப்பட்டது. அப்போது பிரஸிடெண்ட் **லோபர்ட்** பல விடங்களிலிருந்து போயிருக்கிற பிரபுக்களும், கமிஷனர்களும், பிரதிநிதி முதலானவர்களையும் பார்த்து அக்காட்சியினாலுண்டாகும் நன்மைகளை எடுத்துக்காட்டி ஓர் பிரசங்கம் செய்தார். சென்றமீ 30உல் அங்கு பலபொருட்காட்சி ஸ்தலத்தில் ஓர் பாலமிடிந்து விழுந்து சிலர் இறந்தும், பலர் காயம்பட்டும் போய்விட்டார்கள், இம்மாதம் 2உ யெந்திரத்தாலடைந்த காலரியின் சாரம் கீழே விழுந்து இரண்டு வேலைக்காரர்கள் இறந்தும், இருவர் காயம் பட்டும் போய்விட்டார்கள். இக்காட்சிக்கு சென்னையிலிருந்த ம-ா-ா-ஸ்ரீ **சாமிநாத சாஸ்திரி**யாரவர்கள் நமது செப்பிடுவித்தை, ஜாலம், மந்திர சக்தியால் மனிதனை ஆகாயமார்க்கத்தில் படுக்கவைப்பது முதலியவைகளைக் காட்டுவதற்காக விஜயஞ்செய்திருக்கிறார். மேலும் போபிலிதேசத்து இராஜா வேணுகோபால் பஹதூரவர்களும் இக்காட்சியைப் பார்ப்பதற்காக சென்றமீ 13உ பம்பாயில் கப்பல் ஏறி பாரிஸ் நகரம் போயிருக்கிறார். இதன் விசேஷங்களைப் பின்னால் தெரிவிப்போம்.